DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 128/2017 |
| Deposition of witness | : | PW - 10 |
| Name | : | வாசுதேவன் |
| Father's /Husband Name | : | தெட்சிணாமூர்த்தி |
| Village | : | மன்னார்குடி |
| Taluk | : | மன்னார்குடி |
| Age | : | 65 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03st day of October 2024.
Accused present from Judicial Custody.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 19.03.2017–ம் தேதி நன்னிலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மாலை 04.00 மணியளவில் கோவிந்தராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.73/2017 இதச பிரிவு 392–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கை ஆய்வாளர் பார்வைக்கு விசாரணைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் காலம் ஒன்பதில் நகைகளின் விபரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த நகை விபரங்கள் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காலம் எண் பத்தில் சொத்து மதிப்பு பத்தாயிரமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், புகாரில் நகைகளின் மதிப்பு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரரின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். நான் சரியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாத காரணத்தினால் தான் புகார்தாரரிடம் கையொப்பம்

பெறவில்லை என்றால் சரியல்ல. காலம் எண் எட்டில் வாதி எதன் காரணமாக புகார் அளிக்க தாமதம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். நான் புகாரில் நகைகளின் விபரம் இல்லாத பட்சத்தில் முதல் தகவல் அறிக்கை நகைகளின் விபரம் குறிப்பிட்டுள்ளது பற்றி புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. காலதாமதத்திற்கான காரணத்தை நான் குறிப்பிட்டு எழுதாதது பற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. புகார்தாரர் கொடுத்த புகாரில் தாலி குண்டு, புழல் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.9–ல் காசு என்று நகை விபரம் அதிகப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.